**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 140/2024**

| | | DEPOSITION OF WITNESS | PW.2 |
|---|---|---|---|
| NAME | ராமன் | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 12.03.2026.

**வாதி தரப்பில் முதல் விசாரணை :-**

நான் இந்த வழக்கில் 3ஆம் நபர். எனது தரப்பு சாட்சியாக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன், அதில் உள்ள விவரங்கள் தெரியும். படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். எனது தரப்பு பிரமாண வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**3 மற்றும் 4ஆம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வரவில்லை என்றால சரிதான். யார் சொல்லி வழக்கு விவரம் தெரியும் என்றால் கண்ணகி சொல்லி தெரியும். கண்ணகி உறவினர் அல்ல ஊர்க்காரர். கண்ணகி ஏகாம்பரத்தின் வாரிசு சான்று கேட்டு வழக்குப் போட்டுள்ளார். ஏகாம்பரத்தின் அப்பா பெயர் சின்னப்பா அம்மா பெயர் வள்ளியம்மாள். அவர்கள் இருவரும் இறந்து ரொம்பநாள் ஆகிறது.

2. ஏகாம்பரத்தின் முதல் மனைவி பெயர் பட்டம்மாள். அவர்களுக்கு அம்சவேனி என ஒரே மகள். ஏகாம்பரத்தின் இரண்டாவது மனைவி பெயர் கண்ணகி. அவர்களுக்கு மீனா, தீபா என இரண்டு மகள்கள். ஏகாம்பரம் 2007ல் இறந்தார். எனக்கு வழக்கு பற்றி விவரம் தெரியாது என்றாலும் கண்ணகி எனது ஊர்ககாரர் என்பதால் அவருக்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தவறானவை என்றாலும் அதனால் அந்த வாக்குமூலம் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என்றால் சரியல்ல.

ஒம்/– K.கார்த்திக் அசாத்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.